**செய்தி வெளியீட்டு எண்:556** நாள் – **28.8.2009**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒதுக்கீடு செய்த 164 தட்டச்சர்களுக்கு பொதுப்பணித்துறையில் பணி நியமன ஆணைகள்!**

**முதலமைச்சர் கலைஞர் வழங்கினார் !**

**2006இல் இந்த அரசு அமைந்தபிறகு முந்தைய அரசு பிறப்பித்த பணி நியமனத் தடை ஆணை நீக்கப்பட்டு, அரசின் பல்வேறு துறைகளிலும் புதிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். பொதுப்பணித்துறையில் மட்டும் இதுவரை கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 2 ஆயிரத்து 400 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.**

**தற்போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வு செய்து தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ள 164 தட்டச்சர்களுக்கு உரிய பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (28.8.2009) வழங்கினார்.**

**இவர்களையும் சேர்த்து, பொதுப்பணித்துறையில் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 2 ஆயிரத்து 564 பேருக்குப் புதிதாகப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

* * *

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9